R4832

# SENNACHERIB TURNED BACK
# சனகெரிப் திரும்பிப் போனான்

ஏசாயா 37: 14-38

“தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அனுகூலமான துணையுமானவர்.” சங்கீதம் 46:1

கடந்த பாடத்தில் யூதாவின் நல்ல ராஜாவான எசேக்கியாவைப் பற்றியும் தேவனுக்கான அவனது வைராக்கியம், அவன் செய்த குறிப்பிடத்தகுந்த பஸ்கா ஆசரிப்பு மற்றும் விக்கிரக ஆராதனையை நீக்கிப்போடுதல் போன்றவைகளைக் குறித்தும் கவனித்தோம். இந்த பாடம் அவனது ஆளுகையின் கடைசி பகுதியைப் பற்றியதாகும். நினிவேயை தலைநகராகக் கொண்ட அசீரிய சாம்ராஜ்யம் கிழக்கு மற்றும் வடக்கு பகுதியில் முதலாவது உலகலாவிய சாம்ராஜ்யமாக ஆகக்கூடிய அளவிலும் மகா வல்லமையும் அச்சுறுத்தக்கூடிய அளவிலும் ஆகியிருந்தது.

எசேக்கியா யூதாவின் அரியணைக்கு வரும் முன்பே அவனது தந்தை அசீரிய ராஜாவுடன் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டு கப்பம் செலுத்தி வந்தான். எகிப்தியர்களும், பெலிஸ்தியர்களும் மற்றும் சீதோனியர்களும், அசீரியாவின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைப் பெற கூட்டமைப்பு ஏற்படுத்த யூதேயாவை வலியுறுத்தினார்கள். அவனது ஜனங்கள் வலியுறுத்தியதினிமித்தமாக, தீர்க்கதரிசி ஏசாயாவின் மூலம் தேவனுடைய அறிவுரைக்கு எதிராக எசேக்கியா கூட்டமைப்பில் சேர்ந்து கப்பம் கட்டுவதை நிறுத்தினான். காரியம் பிரபலமானது. ராஜா இந்த காரியத்தில் தீர்க்கதரிசி தேவனுடைய பிரதிநிதியாக இருந்ததை உணர்ந்தவனாக தெரியவில்லை. இஸ்ரயேல் தேசம் சர்வ வல்லவருடன் ஒரு விசேஷித்த உடன்படிக்கைக்குள் இருந்தது என்பதையும் அவரே அவர்களது தேவனாகவும் அவர்களது ராஜாவாகவும், நியாயாதிபதியாகவும் இருந்தார் என்பதையும் அவன் நினைத்திருக்க வேண்டும். கீழ்ப்படியாமையின் கடுமையான தண்டனைக்காக தவறு அனுமதிக்கப்பட்டது. ஆனால் ராஜாவும் ஜனங்களும் வருந்தி பாடங்களை கற்றுக்கொண்டு அதற்கான ரூபகாரங்களை கொடுத்ததினால், அதிசயத்தக்கவிதமாக தெய்வீக கருணை வந்ததை நாம் காண்போம்.

### வெற்றியாளன் சனகெரிப்

அசீரியா ராஜா பெரிய படைகளுடன் போருக்கு புறப்பட்டான். எருசலேமை முற்றிகைப் போடுவதின் கஷ்டங்களை அறிந்து அவன் போரை அங்கே ஆரம்பிக்கவில்லை. ஆனால் மத்திய தரைக்கடல் கடற்கரையை கடந்து சீதோனியர், பெலிஸ்தியர்களை ஜெயங்கொண்டு யோப்பா மற்றும் இன்னும் தெற்கே சென்றான். பிறகு கிழக்குப் பக்கமாக சென்று யூதாவின் கோட்டை நகரமாகிய லாகீஸுக்கு சென்றான். யூதாவின் நாற்பது பட்டணங்களும் ஒன்றன்பின் ஒன்றாக விழும் என்று தேசம் முழுவதும் பயத்தினால் நிறைந்திருந்தது. எசேக்கியா ராஜா இந்த முற்றிகையை தவிர்க்கும்படி தனது ஆலோசனைக்காரர்களையும் பிரதானிகளையும் சனகெரிப் ராஜாவிடம் அனுப்பினான். அவர்கள் அவனிடம் மன்னிப்பு கேட்டு அவன் விதிக்கிற கப்பத்தை கட்டுவோம் என்றார்கள்.

அபராதத்தொகை அதிகமாக இருந்தது. அதன் மதிப்பு தற்கால ஒரு மில்லியன் டாலர் அளவுக்கு இருந்தது. இது அந்த காலத்தில் மிகவும் அதிகமானதாக இருந்தது. அவன் ஆலயத்திலுள்ள பொன் ஆபரணங்களையும் கேட்டான். அது அவனுக்கு கொடுக்கப்பட்டு விடுதலை கிடைத்தது. வெற்றி கொண்ட சனகெரிப் எகிப்தை தாக்க இருந்தான். அவன் யூதேயாவுடன் செய்த உடன்படிக்கையை முறித்துக்கொண்டு, அவனது தளபதி எருசலேமுக்கு எதிராக நின்று சரணடையச் சொன்னான். அவன் அறிவித்ததாவது: எருசலேமின் ஜனங்களிடம் நாங்கள் வெற்றிக்கொண்டு விட்டோம். உங்கள் தேவன் உங்களை விடுவிப்பார் என்று நம்பாதீர்கள்; அப்படி நம்பின அநேக ஜனங்கள் சனகெரிப் முன்னே தோற்றுப்போனார்கள்.

எருசலேம் எங்கும் பயம் நிலவியது. எசேக்கியா ராஜாவும் அவனது ஆலோசனைக்காரர்களும் போர், சிறைப்படுதல், அனைத்தையும் இழத்தல் என்பதற்காக மாத்திரம் பயப்படாமல் ஜனங்கள் வாசலைத் திறந்து வைத்து சரணடைய சொல்வதற்கும் துணியவில்லை. பிறகு ராஜாவும், அவனது ஆலோசனைக்காரரும், ஜனங்களும் தேவனை ஜெபத்தில் நாடினார்கள்.

கர்த்தர் கிருபையுடன் காத்திருந்தார். எப்பொழுதும் அவரது உண்மையான பிள்ளைகள் பக்கம் அவர் இருக்கிறார். எனினும் ஆறுதலான வார்த்தையை சொல்ல அவர் காலதாமதம் செய்தார். ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி விசுவாசத்தைக் குறித்தும் அவர்களது தேவன் மேல் சார்ந்திருப்பதைப் பற்றியும் ஒரு பாடத்தை கற்க வேண்டும் என்றும் அவர் எதிர்பார்த்தார். பிறகு கர்த்தரிடமிருந்து பதில் வந்தது. அசீரியா ராஜாவைக் குறித்த தீர்க்கதரிசனம்: “அவன் இந்த நகரத்துக்குள் பிரவேசிப்பதில்லை; இதில்மேல் அம்பு எய்வதுமில்லை; இதற்கு முன்பாக கேடகத்தோடு வருவதுமில்லை; இதற்கு எதிராக கொத்தளம் போடுவதுமில்லை; எனவே கர்த்தர் தமது சொந்த நகரத்தைப் போல பாதுகாப்பார்.” இந்த தீர்க்கதரிசனம் ஜனங்களுக்கு விநோதமாக இருந்தது. எந்த அற்புதத்தால் இது நிறைவேற்றப்படும் என்று அவர்களால் நினைத்து பார்க்க முடியவில்லை. நமக்கான பாடமாவது:

“மர்மமான முறையில் தேவன் இயக்குகிறார்
அவரது அதிசயங்கள் நடைபெற,
கடலில் தமது காலடியை வைக்கிறார்;
புயலின் மேல் சவாரி செய்கிறார். ”

### ஒரே இரவில் ஒரு இலட்சத்து எண்பத்தைந்தாயிரம் பேர் சங்கரிக்கப்பட்டனர்

அசீரியா பாளையத்தில் கர்த்தருடைய தூதன் அடித்தார் என்று தீர்க்கதரிசி ஏசாயா சுருக்கமாகவும் கவிதை வடிவிலும்

கூறுகிறார். எந்த வகையில் என்று கூறவில்லை. காற்றும், அக்கினியும், மின்னலும் கர்த்தருடைய தூதர்கள் என்று வேதவாக்கியங்கள் கூறுவதை நாம் நினைவு கூருகிறோம். சில சமயங்களில் எகிப்தின் வடகிழக்கு பகுதியில் நிலவி வந்த தீவிரமான விஷ சுரம் கூட மரண தூதனால் கொண்டு வரப்பட்டிருக்கலாம். எப்படி அசீரிய படை சங்கரிக்கப் பட்டார்கள் என்பது நமக்கு முக்கியமில்லை.

தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக சகலமும் தெய்வீக வல்லமையில் மாற்றிப்போடப்படுகிறது என்கிற நமக்கான பாடத்தை கவனிக்க வேண்டும். அசீரியா ராஜ்யம் முதலாவது உலக ராஜ்யமாக இருக்கக்கூடாது என்பது தேவனது சித்தமாக இருந்தது. நூறு வருடங்களுக்கு பிறகு பாபிலோன் ராஜ்யத்திற்காக அந்த கனம் வைக்கப்பட்டிருந்தது. அப்பொழுது தான் தாவீதின் வம்சத்தில் வந்த நிழலான ராஜ்யபாரம் நீக்கப்படுகிற சரியான காலமாக தேவன் நியமித்திருந்தார். அதைக் "கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன்" மேசியா வரும்வரை அது இல்லாதிருக்கும்.

நாம் சர்வ வல்லவரின் நிழலில் தரித்திருந்து அவருடன் நேர்மையாக இருக்க வேண்டும் என்பதே கிறிஸ்தவர்களுக்கான பாடமாக இருக்கிறது. இப்படி செய்வதின் மூலம் சகலமும் நமது நன்மைக்கு ஏதுவாக நடக்கும்.

**"கர்த்தரின் ஒரு பார்வையில் சத்துருவானவன் பனியைப் போல உருகிப்போவான்"**

தூதனால் தோற்கடிக்கப்பட்ட சனகெரிப்பின் கதை நமது மாபெரும் கவிஞர் பைரோன் என்பவரால் கீழ்க்கண்டவாறு சொல்லப்பட்டிருக்கிறது.

"ஆடுகளுக்குள்ளே ஓநாயைப் போல அசீரியர்கள் வந்தார்கள்.
அவனது கூட்டாளிகள் இரத்தாம்பரத்தைப் போலவும் பொன்னைப் போலவும் ஜொலித்தார்கள்;
கோடைக் காலத்தின் காட்டின் இலைகள் பசுமையாக இருப்பது போல,
சேனைகள் அவர்களது கொடிகளுடன் சூரிய அஸ்தமனத்தில் காணப்பட்டன.
"இலையுதிர்காலத்தில் காட்டின் இலைகள் பறக்கடிக்கப்பட்டது போல,
சேனைகள் அடுத்த நாள் திகைத்து சாய்ந்து கிடந்தனர் ;
ஏனெனில் மரண தூதன் அழிவில் தனது சிறகுகளை விரித்தான்.
அவன் கடக்கும் போது எதிரிகளில் முகத்தில் மூச்சு விட்டான்.
அனைத்து கூடாரங்களும் அமைதியாயிருந்தது. கொடிகள் மட்டுமே இருந்தன.
ஈட்டிகள் எடுக்கப்படவில்லை, எக்காளம் ஊதப்படவில்லை;
வல்லமையான புறஜாதிகள், பட்டயத்தினால் கவனிக்கப்படவில்லை.
கர்த்தரின் பார்வையில் பனியைப் போல உருகிப் போனார்கள்."